
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
குருவே துணை
வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில்

# திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

இதனுள்ளே

1. அருள் வெள்ளத்தில் முழ்க வாரீர்
2. உலகப் பற்றை நீக்க என்ன செய்ய வேண்டும்.
3. பற்றற்று எல்லோரும் வாழ வேண்டும்!
4. அறிவில் தெளிவு வேண்டும்?
5. தவத்தை ஆற்றி வெற்றி பெறலாம்!
6. துன்பங்களையும் இகழ்ந்து நோக்குங்கள்.
7. முயற்சி பயிற்சி தேர்ச்சி
8. அனைத்துமாகி நானே நின்றேன்
9. ஆராத ஆர்வங் கூர அழுந்துவீர்
10. தெருள்வீர் ஆகில் இதுசெய்மின்

## 1.அருள் வெள்ளத்தில் முழ்க வாரீர்

யாத்திரை என்றால் பயணம். உலக இன்பங்களை விட்டுவிட்டு முக்தி நோக்கி மோட்சம் நோக்கி பயணிக்கும் பயணம் பற்றி இந்த பத்துப் பாடலில் பதிவு செய்துள்ளது திருவாசகம்.

பிறப்பு-இறப்பு என்னும் பெருங்கடலில் இருந்து தப்பிக்க என்ன வழி என்று மாணிக்கவாசகர் சொல்லும் வழிகள் இலக்கிய நயம் படைத்த பாடல்கள் ஆகும்.

திருவாசகத்தையும் வேதாத்திரியத்தையும் உணர்ந்து ஓதுகிற நேரம் ஓதினாலும், அவ்வப்போது ஓய்வாக அந்த மகான்களின் வாசகங்களை நினைந்து ஒவ்வொன்றாகச் சிந்தித்தால், ஒவ்வொரு அடியுமே ஒவ்வொரு மாணிக்கக் கல்தான்!.

தமிழ் மறையாகிய திருவாசகத்தையும் வேதாத்திரியத்தையும் ஒருமுறை ஓதினாலும் கருங்கல் மனமும் கரையும்.

கண்களில் மணற் கேணியின் ஊற்றுப் போல கண்ணீர் பெருகும்.

உடம்பெல்லாம் சிலிர்க்கும். பக்தியும் ஞானமும் தரும் மேலிட்டால் இறைவனை இன்னும் காணவில்லையே என்ற பரபரப்பு ஏற்படும். உடனே அவர்கள் இறையடியார் ஆவரேயன்றி மற்றையோர் ஆகார்.

திருவாசகமும் வேதாத்திரியமும் உணர்த்தும் அருள் அனுபவத்தைத் தவிர மாணிக்கவாசகருக்கும் வேதாத்திரி மகரிஷிக்கும் தனித்ததோர் வாழ்வு இருந்ததில்லை.

”பூவார் சென்னி மன்னன் எம்
  புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவாது உள்ளம் கலந்து உணர்வாய்
  உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆவா என்னப் பட்டு அன்பாய்
  ஆட்பட்டீர் வந்து ஒருப் படுமின்
போவோம் காலம் வந்ததுகாண்
  பொய்விட் டுடையான் கழல்புகவே.” (திருவாசக.பா.605)

- தலையில் பூக்களை சூடி இருப்பவனும், எம் அரசனும் ஆகிய பெருமானே!
- சிறியோர்களாகிய எங்களது உள்ளத்தில் உணர்வாய்க் கலக்கும் தன்மையினால் உருகுகின்றோம்.
- அருள் வெள்ளத்தில் முழ்கி, ”ஐயோ!” என இரங்கி. அன்பால் ஆட்படுத்தப் பட்டவர்களே!

- வந்து ஒன்று சேருங்கள்!
- பொய்யான உலக வாழ்வை விட்டு வீடு அடையும் காலம் வந்துவிட்டது.

பேரின்ப வெள்ளத்தில் முழ்க அழைக்கிறது வேதாத்திரியம்.

அன்பும் கருணையும் உடைய தெய்வ நிலையானது விண் முதல் ஆறறிவாகி, மனித மனத்தின் மூலம் தனது பரிணாமப் பயணச் சரித்திரத்தை உள்ளுணர்வாகக் காட்டிய பேரறிவிற்கு நன்றி கூறுமிடத்து, அத்தகு உள்ளுணர்வு அடைந்த நம்மையே இறைநிலைக்கு அர்ப்பணம் செய்து மகிழ்ச்சியடைவோம்.

மேலும் உலக வாழ்வில் உயிரினங்களின் உற்பத்திக்கு ஏற்ற வகையில் பெண்ணினத்தை வடிவமைத்து எல்லா உயிர்வகைக்கும் அன்பு காட்டி, கருணையை வழங்கிக் காக்கும் அந்தப் பேராதார இறைநிலைக்கு நன்றி கூறி மன நிறைவு பெறுவோம்.

எல்லா உயிர் வகைகட்கும் உணவாகவும் மற்றும் வாழ்க்கை வசதிகளாகவும், சிக்கலில்லாமலும், வரையறை இன்றியும், தங்களது வளர்ச்சியை அர்ப்பணித்து உலகைக் காத்து வருகின்றன தாவர இனங்கள்.

அத்தகு தாவர வர்க்கங்களை அன்போடும் கருணையோடும் உருவாக்கி, இதர உயிரினங்களுக்கு அளித்துள்ள பேரன்புக்காகவும், கருணைக்காகவும் இறைநிலைக்கு நன்றி கூறி, அப் பெரு மகிழ்ச்சியான பேரின்ப வெள்ளத்தில் திளைப்போம்.

ஒவ்வொரு நாளையும் இறைநிலையின் அன்பின் ஊற்றுப் பெருக்க நன்னாளாகவே கருதி என்றும் கொண்டாடுவோம். வாழ்க வளமுடன்.

## 2.உலகப் பற்றை நீக்க என்ன செய்ய வேண்டும்

ஞானத்தை அடைந்த மெய்ஞானிகள், தாம் அந்த மெய்ப்பொருளை அடைய எத்தனையோ பெரிய துன்பங்களை கடந்து, உலகியலின் பற்றுக்களை அடைந்து, அப்பற்றை நீக்குவதற்கு எத்தகைய அறமெல்லாம் செய்து,

அந்த அறத்திலும் எத்தனையோ இழப்புக்களை சந்தித்து, மெய்ப்பொருளை அடைந்து பேறு பெற்றிருப்பார்கள் என்பதனை வார்த்தையால் விவரிக்க இயலாது.

ஏனெனில் ஒவ்வொரு மெய்ஞ்ஞானிக்கும் ஒவ்வொரு விதமான வினைகள், அத்தகைய வினைப் பலன்களை வினையறுக்க நன்றெது, தீதெது என உணர்த்தி, நடுவு நிலை அடைந்து,
அதன் மூலம் அவர்களுக்கு அனுபவ ஞானம் கிடைக்கப் பெறுகிறது.

அந்த ஞானத்தை வாணிபம் செய்யாமல் தன்னை அண்டி வருபவர்களுக்கு வழங்குகிறார்கள். அப்படியெனில் நாம் அவர்களை எத்தனை பேறு, பாக்கியம்....

"புகவே வேண்டா புலன்களில்நீர்
  புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கவெல்லாம்
  வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத்து உள்புகுந்து
  நாயே அனைய நமை ஆண்ட
தகவே உடையான் தனைச்சாரத்
  தளராது இருப்பார் தாம்தாமே. " (திருவாசக.பா.606)

- நாய் போன்ற கடைப்பட்ட நம்மை உலகம் எள்ளி நகைக்குமாறு ஆட்கொண்ட. பாம்புகளை அணிந்துள்ள பெருமானது. பூப்போன்ற திருவடிகளையே பெரிதும் நினையுங்கள்.
- புலன் இன்பங்களில் ஈடுபடாதீர்கள்.
- மற்றுமுள்ளே உலகப் பற்றுக்கள் (அடியார்களுக்குத் தேவை இல்லாத) அனைத்தையும் விட்டு விலகுங்கள்.
- தகுதி உடைய எம்பெருமானை அடைவதற்கு அயர்வில்லாத ஊக்கம் உடையவராய் இருங்கள்.

**உலகப் பற்றுக்களை விட  வேதாத்திரி மகரிஷி வழி காட்டுகிறார்.**

உலகப் பொருட்கள் மீது பற்றுள்ள வரையிலும் மெய்ப் பொருளான இறைநிலையை உணர முடியாது.

பிறப்பு இறப்பு எனும் வாழ்க்கைக் கடலைக் கடக்க முடியாது. உடல், உயிர், சீவகாந்தம் மூன்றும் கூடிய சீவனின் உடலுக்கு, பிறப்பு முதல் இறப்பு வரையில் பெரும்பாலும் துன்ப அனுபவங்களாகவே இருக்கின்றது.

இந்த உண்மையை ஒரு பேரறிஞர் தொகுத்துக் கூறியிருக்கிறார் ஒரு கவியின் மூலம்.

**" வேதநூல் பிராயம் நூறு**
**மனிதர்தாம் புகுவ ரேலும்**
**பாதியும் உறங்கிப் போகும்**
**நின்றுஅதில் பதினை யாண்டு**
**பேதை பாலகன் அதாகும்**
**பிணிபசி மூப்புத் துன்பம்**
**ஆதலால் பிறவி வேண்டேன்**
**அரங்கமா நகர் உளானே ! "**

இது ஒரு பக்திப் பாடலாக இருந்தபோதிலும் மனித வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டிய துன்பங்களை விளக்கிக் கூறுகிறது.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" என்ற குறளில் இறை நிலையுணர்வும், பொருட்கள் மீது பற்று விட்டு மனம் தூய்மை பெற வேண்டியதும் ஒன்றிணைந்து பேறாக உணர்த்தப்பட்டுள்ளன.

## 3.பற்றற்று எல்லோரும் வாழ வேண்டும்!

**மகாபாரதம் சொல்லுகிறது.**

**'எ**ந்தப் பொருள் மீது மனிதனுக்கு அளவற்ற ஆர்வம் ஏற்படுகிறதோ, அந்தப் பொருளால் அடையக் கூடிய துன்பங்களை, முதலில் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அப்போதுதான் அந்தப் பொருளின் மேல் ஏற்படும் பற்றின் வலிமை குறையும்.

கடலில் மிதக்கும் இரண்டு கட்டைகள் ஒரு கணத்தில் ஒன்று சேரும்; மறுகணமே ஒன்றையொன்று விட்டு விலகும்.

சேரும் உறவுகள் ஒரு நாள் பிரியும். இல்லாதிருந்து, ஒரு நாள் உறவாய் மலர்ந்து, மீண்டும் இல்லாமல் போவதுதான் வாழ்க்கை.

இந்த வாழ்க்கையில் அளவுக்கு மீறிய பற்றை வளர்த்துக் கொள்ளலாகாது.

குவிந்த செல்வம் குறைந்து போகும். உயர்ந்த வாழ்வு தாழ்ந்து போகும். சேர்ந்த சுற்றம் பிரிந்து போகும். பற்றுகளில் இருந்து விடுபட மனிதன் மனதை பக்குவப்படுத்த வேண்டும்' என்கிறது மகாபாரதம்.

'பொருட்களின் மீதான பற்றை விடுங்கள். செல்வமோ, அதிகாரமோ மனிதனை அடிமைப்படுத்தி விடாது.

அவற்றின் மீதிருக்கும் நீங்காத ஒட்டுதல்தான் ஒருவனை நிரந்தர அடிமையாக்கிவிடுகிறது' என்றார் புத்தர்.

பற்றற்று இருத்தல், பயமற்று இருத்தல், சினமற்று இருத்தல் ஆகிய மூன்று பண்பு நலன்கள்தான் பகவத் கீதையின் அடிநாதம்.

'அச்சம், சினம் ஆகிய இரண்டுக்கும் அடித்தளமே பற்று' என்ற உண்மையை நாம் உணர வேண்டும்.

ஒரு பொருளின் மீது முதலில் பார்வை பதிந்ததும் மனதில் ஆசை அலையடிக்கும்.

ஆசையின் வேகம் பெருகி, பற்றாய்ப் பரிணமிக்கும். அதன்பின் அந்தப் பொருளை தன்னுரிமையாக்கத் துடிக்கும் வேட்கை அதிகரிக்கும்.

அது தனக்கு கிடைத்தே ஆக வேண்டும் என்ற தவிப்பில் மனம் உறக்கமின்றிப் பதை பதைக்கும்.

ஒரு வேளை விரும்பிய பொருள் கிட்டாது போய்விடுமோ என்ற ஏக்கம் உயிரை வாட்டும்.

கிடைத்தாலும் கூட என்றேனும் அது கை நழுவி விடுமோ என்ற ஓயாத அச்சத்தில் மனம் கவலை கொள்ளும்.

இந்தக் கவலையே கோபமாக உருமாறும். கோபம் பகையை உருவாக்கும். முடிவில் மனம் நிம்மதியை இழக்கும்.

பற்றற்றவருக்குப் பயமில்லை. பயமற்றவர்க்குச் சினமில்லை. அதனால்தான் பகவத் கீதை பற்றற்ற பற்றை (detached attachment) வாழ்வில் வலியுறுத்துகிறது.

மயானத்தில் முனிவர் ஒருவர் தவம் புரிந்தார். அவருடன் சீடன் ஒருவனும் தவத்தில் ஈடுபட்டான்.

ஒரு நாள் நள்ளிரவில் சீடனைத் தனியாகத் தவத்தில் இருக்கச் செய்து, முனிவர் தனது குடிலுக்குள் ஓய்வு எடுத்தார்.

சிறிது நேரத்தில் சீடன் முனிவர் முன் வந்து நின்றான். "ஏன் இவ்வளவு விரைவில் திரும்பிவிட்டாய்?" என்ற முனிவரிடம், "மயானத்தில் தனியே இருக்க பயமாக இருக்கிறது" என்று தயங்கியபடி சொன்னான் சீடன்.

"வேதம் படித்த நீ பயப்படலாமா? உன் சரீரத்தில் நீ வைத்திருக்கும் பற்றுதான் உன்னுள் பயத்தை வரவழைத்தது.

அழியக் கூடிய நிலையற்ற பொருட்களின் மீது பற்று வைத்தவன், அழியாத சத்தியத்தை அடைய முடியாது என்று கடோபநிஷதம் கூறுவதை அறியவில்லையா நீ?" என்றார் முனிவர்.

சரீர சுகத்தில் நாம் வைக்கும் எல்லையற்ற பற்றுதான் எல்லாவித துன்பங்களுக்கும் மூல காரணம்!

துன்பம் தரும் உலகப் பற்றுகளில் இருந்து விடுபட, இதயத்தில் இறைவனைப் பற்றி நிற்பதே ஒரே வழி.

வாழ்க்கை பயணத்தில் வருவது அனைத்தும் நில்லாது ஒருநாள் நீர்க் குமிழாய் மறைந்துவிடும் என்ற ஞானம் கனிந்தவனுக்கு, எதன் மீதும் ஆசை எழாது.

'பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு' என்ற வள்ளுவமே மண்ணில் நல்ல வண்ணம் வாழ உயர்ந்த வழிகாட்டி.

உலகப் பற்றை விடவேண்டும் என்று சொல்லுகிறது திருவாசகம் இந்தப்பாடலில்.

"தாமே தமக்குச் சுற்றமும்
  தாமே தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார்
  என்ன மாயம் இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
  அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு
போமாறு அமைமின் பொய்நீக்கிப்
  புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே." (திருவாசக.பா.607)

- நமக்கு உறவாரும் நாமே.
- நம்முடைய விதியை வகுப்பதும் நாமே.
- நான் யார்?
- எது என்னுடையது?
- என்னிடம் உள்ள பாசங்கள் எவை?
- என்று எண்ணிப் பார்த்து, மயக்கம் தெளியுங்கள்.
- இறைவனது உள்ளக் குறிப்பு இன்னது என அறிந்து, அவனுடைய பழைய அடியார்களுடன் சென்று சேரும் வழியைத் தேடுங்கள்.
- அவ்வாறு செய்து. பொய்யான உலகப் பற்றை விட்டு நீங்க, பாம்பணிந்த பெருமானின் பொன் போன்ற திருவடிகளைச் சென்று சேர்வோமாக!

உலகப் பற்று அற்ற வாழ்வுக்கு வழி காட்டுகிறது வேதாத்திரியம்.

"பற்றற்று எல்லோரும்  வாழ வென்றால்,
  பலர் கூட்டு முயற்சியினால் அன்றி ஆகா.
உற்றுற்று ஆராய்ந்தேன் உறக்கம் விட்டும்.
  உலக சமாதானமது, பாசம் பந்தம்
அற்றஒரு புது புரட்சிகர திட்டத்தால்
  அன்றி அதுகிட்டாது நிலைத்திடாது
கற்றவர்கள் ஆராய்வீர்!  நுணுக்க மாகக்
  கருத்தினிலே எழும் சிக்கல் எடுத்துரைப்பீர்."  (ஞாக.பா.966)

தனி மனித வாழ்வு இனிமையாக   வம், சமுதாயம் வளம் உயர்ந்தும் இருக்க வேண்டும்.

ஆனால் பல பிறவிகளில் தொடர்ந்து வந்த பழக்கத்தால் தனி மனிதர் பொருள் உடைமையால் பொருள் பற்றும் மக்கள் பாசமும் ஏற்பட்டு, மனிதர்களில் பிரிவுகள் உருவாகி இனிமை கெட்டு விட்டது.

பற்றுக்களிலிருந்து விடுபட்டு மனிதன் ஆன்ம சுதந்திரத்துடன் வாழ வேண்டும்.

பலரது கூட்டு முயற்சியினால் தான் பற்றிலிருந்து விடுபட முடியும்.

கூர்ந்து கவனித்து, தூக்கத்தையும் தவிர்த்து ஆராய்ந்தேன்.

பாச பந்தம் இல்லாத ஒரு புதிய புரட்சிகரமான திட்டத்தால் அன்றி உலக சமாதானம் என்பது கிடைக்காது. நிலைக்காது.

கற்றறிந்து அறிஞர் பெருமக்கள் பாசபந்தம் அற்ற வாழ்வை நடைமுறைப்படுத்துவது பற்றியும், அதனால் விளையும் நலன்களையும் எதிர் கொள்ள வேண்டிய நுட்பமான சிக்கல்களையும், அதற்கான தீர்வுகளையும் எடுத்து உரைக்க வேண்டும்.

## 4.அறிவில் தெளிவு வேண்டும்?

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்கிறார்……

பெரிய பணக்காரன் ஒருவன், ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் ஆயிரம் பொற்காசுகளை அன்பளிப்பாக அளிக்க விரும்பினான்.

பரமஹம்சர் மறுத்தார். பணக்காரனோ விடாமல் வற்புறுத்தினான்.

"சரி, உன் மன நிம்மதிக்காக பெற்றுக் கொள்கிறேன். இனி, நான் விரும்பியபடி இதைச் செலவழிக்கத் தடையில்லையே?" என்று கேட்டார் பரமஹம்சர். "ஒரு தடையும் இல்லை!" என்றான் செல்வந்தன்.

"இந்த ஆயிரம் பொற் காசுகளையும் கொண்டு போய் கங்கையில் எறிந்துவிட்டு வா!" என்றார் அந்த மகான்.

பணக்காரன் அதிர்ந்து போனான். ஆனாலும் அவருடைய கட்டளைப்படி கங்கைக் கரைக்குச் சென்றவன் மிகுந்த துயரத்துடன் ஒவ்வொரு பொற்காசாக எடுத்து நீரில் எறிந்தபடி நின்றான்.

அரை மணி நேரம் கடந்தும் அவன் திரும்பாததால் ராமகிருஷ்ணர் கரைக்குச் சென்று பார்த்தார்.

ஒவ்வொரு பொற்காசாக நீரில் எறிந்து கொண்டிருந்தவனிடம், "என்ன முட்டாள்தனம் இது? ஒரேயடியாக ஒரு கணப் பொழுதில் வீசியெறிந்துவிட்டு, விரைவாகத் திரும்பாமல், ஏன் ஒவ்வொன்றாக எண்ணி எறிகிறாய்?" என்று கேட்டார்.

"ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாய் நான் சேமித்த நாணயங்களை ஒரே கணத்தில் வீசி எறிந்துவிட மனம் வரவில்லை.

அதனால்தான் ஒவ்வொன்றாக நீரில் எ  றிந்தபடி நிற்கிறேன்" என்றான் செல்வந்தன்.

அவனைப் பார்த்துப் பரிதாபப்பட்ட பரமஹம்சர், "இழப்பதற்கு முடிவெடுத்து விட்டால், ஒரே கணத்தில் இழந்து விட வேண்டும்" என்றார்.

நம்மால் அந்தப் பணக்காரனைப் போல் ஒவ்வொன்றாக இழப்பதற்குக்கூட முடிவதில்லை. (ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் உபதேசம்)

”உலக வாழ்க்கை என்னும் விளையாட்டை கைவிடுங்கள்” என்று இந்தபாடலில் திருவாசகம் சொல்லுகிறது.

"அடியார் ஆனீர் எல்லீரும்
  அகல விடுமின் விளையாட்டைக்
கடிசேர் அடியே வந்து அடைந்து
  கடைக்கொண்டு இருமின் திருக்குறிப்பைச்
செடிசேர் உடலைச் செலநீக்கிச்
  சிவலோகத்தே நமை வைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்தன்
  பூவார் கழற்கே புகவிடுமே." (திருவாசக.பா.608)

- நீங்கள் எல்லாம் அடியார் ஆகி விட்டீர்கள்.
- உலக வாழ்க்கை என்னும் விளையாட்டை கைவிடுங்கள்.
- மணம் பொருந்திய திருவடிகளை வந்து சேருங்கள்.
- இறைவனது உள்ளக் குறிப்பு அறிந்து. அதனைக் கடைப்பிடியுங்கள்.
- குற்றம் நிறைந்த இந்த உடலைக் கழித்து. நம்மை சிவலேகத்தில் வைப்பான்.
- திருநீறு பூசிய மேனியில் பாம்மை அணியும் அவனது பூப்போன்ற திருவடிகளில் நினைவு பொருந்துமாறு செய்யுங்கள்.

உலக வாழ்க்கை என்னும் விளையாட்டை கைவிடுங்கள்." என்கிறார் மாணிக்கவாசகர்.

உலக வாழ்க்கையை கைவிடுவதற்கு அறிவில் தெளிவு வேண்டும் என்கிறது வேதாத்திரியம்.

"ஐந்து புலன்கள் மூலம் உயிரின் ஆற்றல்
  அழிவதையே இன்பமென உணர் மயக்கம்
சிந்தனையில் உயருங்கால் சீவ காந்தம்
  சிதறுவதே ஐயுணர் வென்றிறந்து கொண்டோம்.
உந்த உந்தக் குண்டலினி புருவ மையத்
  தூறிவரும் பேரறிவின் ஆற்றல் பெற்று
சொந்தத் தனி முயற்சியினால் வாழ் வாராய்ந்து
  சொல்நினைவு செயல்மூன்றை ஒழுங்கு செய்வோம்." (ஞாக.பா.1396)

அறிவுக் கருவியகளாகிய, தோல், நாக்கு, மூக்கு, கண், காது ஆகிய ஐம்புலன்கள் மூலம் உயிர் சக்தியாகிய ஜீவகாந்தம் செலவழிகிறது.

இவ்வாறு புலன்கள் மூலம் செலவாகும் போது ஏற்படுகிற உணர்வை மனமானது இன்பம் எனக் கருதிக் கொள்கிறது.

உயிர் சக்தி செலவாவதை இன்பம் எனக் கருதுவது மனதின் மயக்க நிலையாகும்.

சிந்தனையை உயர்த்திய போது ஜீவகாந்தம் புலன்கள் வழியே செலவாவது தான் ஐயுணர்வு என்பதை அறிந்து கொண்டோம்.

குண்டலினி சக்தி என சிறப்பாக அழைக்கப்டும் உயிர்ச்சக்தியானது இரு புருவ மையமாகிய ஆக்கினையில் தங்கிப் பெருகப் பெருகப் பேரறிவின் ஆற்றல் கிட்டுகிறது.

அத்துடன் அவரவர் தனித் தனியாக சொந்தமாக முயற்சி செய்து வாழ்க்கையை ஆராய்ந்து எண்ணம், சொல், செயல் மூன்றையும் ஒழுங்கு செய்து, அறிவில் தெளிவு பெறுவோம்.

## 5.தவத்தை ஆற்றி வெற்றி பெறலாம்!

கோபம் ஒரு கொடிய மிருகம்; அது வளர்ப்பவர்களையே அழிக்கும். கோபமும் புயல் போன்றது தான் அது அடங்கிய பின் தான் தெரியும், அதனால் அடைந்த நஷ்டம் எவ்வளவு என்று. மந்தரை என்னும் கூனிக்கு ராமன் மீது ஏற்பட்ட கோபம் கைகேயி மூலமாக ராமன், லட்சுமணன், சீதை மூவரையும் வனவாசம் அனுப்பியது.

பாஞ்சாலியின் துகில் உரிந்தது, கவுரவர்கள் மூலம் மகாபாரத போராக்கியது.

துரியோதனனுக்கு பாஞ்சாலி மீது, சகுனிக்கு பாண்டவர்கள் மீது, சூர்ப்பனகைக்கு ராம லட்சுமணர் மீது என பலவித கோபங்களால் பல பிரச்னைகள் ஏற்பட்டது.

ராவணன் சீதையை கவர்ந்தால் இலங்கை அழிந்தது.

கண்ணகி கோபம் மதுரையை எரித்தது. நாட்டை ஆள்பவர்களுக்கு அண்டை நாட்டின் மீது ஏற்படும் கோபத்தால் உருவான போர் என கோபம் ஆக்கியதை விட அழித்ததே அதிகம்.

கோபத்தில் கொலை செய்து தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்ட பலர் 'ஒரு வினாடி கோபப்படாமல் இருந்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காதே' என்று வருந்துவதை பார்த்திருக்கிறோம்.

ஒரு நொடி கோபத்தால் உண்டாகும் விளைவுகள் வாழ்க்கை முழுவதும் நீடிக்கும்.

மனதில் கனன்று கொண்டிருக்கின்ற கோபம் மனிதர்களிடம் தீராப் பகையை உண்டாக்கும்.

சின்ன தீப்பொறி பெரிதாகி பெருங்காட்டை அழிப்பது போல் மனித குலம் அழிந்த சம்பவங்கள் உண்டு.

குழந்தைகளை, மாணவர்களை நல்வழிப்படுத்த, அதிகாரிகள் தன் கீழ் பணிபுரிபவர்களிடம் வேலை வாங்க கோபத்தை பயன்படுத்தலாம்.

ஆனால், இந்த கோபம் எதிராளியை காயப்படுத்த கூடாது. நாம் பேசும் முன் என்ன பேசப் போகிறோம் என்று சிந்தித்து பேச வேண்டும்.

கோபம் வரும் போது உடனடியாக அதைத் தடுக்க நம் மூச்சு உள்ளே போவதை, வெளியே வருவதை கவனிக்க வேண்டும்.

இதற்கு பெயர் விபாசனா எனப்படும். பற்களை இறுக்கிக் கொண்டு உதடுகளைப் பிரிக்காமல் மவுனம் காக்கலாம்.

இரண்டு கைகளில் உள்ள நடு விரல்களை அழுத்தலாம். நடை, உடற் பயிற்சி செய்யலாம். உடனடியாக குளிர்ந்த நீர் அருந்தலாம்.

வாழ்க்கைக்கு முக்கியமானவர்களாக நாம் கருதும் நபர்களின் முகங்களை ஒரு வினாடி நம் மனக்கண்ணில் கொண்டு வந்தால் கோபம் போய்விடும் என உளவியல் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

மன்னிக்கும் குணத்தை வளர்த்துக் கொள்ளுதல், பிராணாயாமம் என்னும் மூச்சுப் பயிற்சி செய்தல், தியானம் செய்தல், நகைச்சுவை உணர்வு, வாரம் ஒரு நாள் விரதம், சைவ உணவுகளை உண்டு அசைவ உணவுகளை தவிர்ப்பது போன்ற வழிமுறைகளை கையாண்டால் கோபத்தை குறைக்கலாம்.

பிறர் நம் மீது கோபப்படும் போது அந்த கோபத்தை பொருட்படுத்தாமல் அந்த இடத்தை விட்டு நகர்ந்து விடலாம்.

கோபம், விருப்பம் முதலியவற்றைக் கைவிடுங்கள் என்று சொல்கிறது இந்தப்பாடலில் திருவாசகம்.

"விடுமின் வெகுளி வேட்கைநோய்
  மிகஓர் காலம் இனியில்லை
உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோடு
  உடன்போ வதற்கே ஒருப்படுமின்
அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள்
  அணியார் கதவு தடையாமே
புடைபட்டு உருகிப் போற்றுவோம்
  புயங்கன் ஆள்வான் புகழ்களையே." (திருவாசக.பா.609)

- கோபம், விருப்பம் முதலியவற்றைக் கைவிடுங்கள்.
- மேன்மை அடைய இனி ஒரு சமயம் வாய்க்காது.
- நம்மை அடிமையாக ஏற்றுக் கொண்டவனின் திருவடிக்கீழ் பெரும் கூட்டமாகச் சென்று சேர ஒன்றுபடுங்கள்.
- அழகிய கதவுகள் அடைபடும் முன்பே, சிவபுரம் சென்று சேர்ந்து விடுவோம்.
- அங்கு உள்ள பாம்பு அணிந்த பெருமானின் புகழ் மொழிக9ளப் பேசித் தங்குவோமாக!

சினமின்றி வாழ வழி காட்டுகிறது வேதாத்திரியம்.

முதலில் போதிய வலுவான சூழ்நிலையில் தான் சினம் எழும். பிறகு பழக்கத்தால் மிக எளிதில் அது எழுந்து கொண்டே இருக்கும். அறிவை மயக்கி கேடுகள் பல விளைவிக்கும்.

உடல் நலம், அறிவு நலம், செல்வ நலம், துணை நலம் எல்லாவற்றையும் சினம் சிறுகச் சிறுகவோ, விரைவாகவோ அழித்துவிடும்.

இது ஒரு மனநோயாகவே மாறி வலுப்பெற்றுவிடும்.

எழுந்த சினம் செயல்படவில்லையேல் தண்டிக்கவோ, சீரழிவு செய்யவோ முடியாத சூழ்நிலையில் எதிரி வலுப் பெற்றிருக்கின்ற போது அல்லது எதிரியே இல்லாத நிலையில் சினமே கவலையாகவும், கண்ணீராகவும் மாறி விடும்.

எனவே இச்சினத்தை எவ்வாறு ஒழிப்பது? நினைவோடு நின்று முறையாகப் பயின்று வெற்றி பெறுங்கள்.

தனியே ஒரு இடத்தில் அமைதியாக உட்கார்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கு யார் மீது சினம் எழுகின்றது?

- அவரை முதலில் நினைவு கொள்ளுங்கள்.
- என் சினத்திற்கு அவர் தான் காரணமா?
- அல்லது என் தவறும் துணையாக உள்ளதா?
- என் தவறு எத்தனை சதவீதம்?
- என் தவற்றைத் திருத்திக் கொள்ள இதுவரை யான் எடுத்த முயற்சி என்ன?
- அவர் தவற்றை நான் என் சினத்தின் மூலம் போக்க முடிந்ததா?

இவ்வாறு சிந்திக்கின்ற போது சினத்தால் இழந்த இழப்புகள் நினைவிற்கு வரும். உங்கள் தவறு இருந்தாலும் அங்கே தெளிவாகத் தெரியும். சினத்தை ஒழித்துவிட வேண்டும் என்ற முடிவும் ஓங்கும்.

மேலும் சினத்தின் மூலம் நீங்கள் பெற்று வருகின்ற உடல் நல இழப்பையும் நினைவு கொள்ளுங்கள்.

சினம் கொள்ளுகின்ற போது உயிராற்றல் மிகுகின்றது. இரத்தம் சூடேறுகிறது. இரத்த ஓட்டத்தின் அழுத்தம் அதிகரிக்கின்றது.

கண்கள் ஒளியிழக்கின்றன. இருதயம் துரிதப்படுத்தப் பெற்று அதன் துடிப்பு விரைவாகின்றது.

நரம்புத் தளர்ச்சி ஏற்படுகின்றது. பொதுவாக உடலியக்க ஒழுங்கே சீர் குலைந்து போகின்றது.

சினத்தோடு நீங்கள் இருக்கின்ற போது உறவினர்கள், நண்பர்கள் கூட உங்களை நெருங்க அஞ்சுகின்றனர்.

உங்கள் சினமானது மற்றவர்களுக்கும் சினத்தை அல்லது வருத்தத்தை தூண்டுகிறது.

இவற்றையெல்லாம் நினைவுக்குக் கொண்டு வாருங்கள். சினம் ஒழிப்பு இன்றியமையாதது என முடிவு கிடைக்கும்.

தொடர்ந்து நினைவைச் செயல்படுத்துங்கள். இனி இந்த நபரோடு தொடர்பு கொள்ளுகின்ற போது சினம் கொள்ள மாட்டேன்.

மறதியின்றி விழிப்போடு இருப்பேன். "எந்த நிலையிலும் சினம் கொள்ளாமல் இருக்கின்ற அறிவைப் பாதுகாத்து கொள்வேன்" என்று நீங்களே மனதிற்குள் கூறிக் கொள்ளுங்கள்.

ஒரு வாரம், காலை, மாலை உட்கார்ந்து சினம் ஒழிப்பு உறுதிமொழிகளை உருப்போடுங்கள்.

நினைவு மறவாமல் குறிப்பிட்ட நபரோடு பேசுங்கள், பழகுங்கள். இம்முறையை ஒரு வார கால நோன்பாகக் கொள்ளுங்கள்.

வெற்றி கண்டுவிட்டால் பிறகு எல்லாரிடத்திலும் சினம் கொள்ளாத வெற்றியை எளிதில் பெற்றுவிடலாம்.

சினத்தை ஒழித்துவிட்டால் வஞ்சம் ஒழிந்து விடும். நலம் தருகின்ற முறையிலான ஆராய்ச்சி மிக்க தண்டனையோ அல்லது மன்னிப்போ அளித்துவிட்டால் வஞ்சம் எனும் மனப்பான்னம முறிந்து விடும்.

”சினமடக்கி, அறுகுணத்தைச் சீரமைத்துக் கொண்டு,
  சிந்தனையை அகத்தவத்தால் உயர்த்தி நின்றபோது,
மனமடக்கி பேரின்ப எல்லை நிற்க நிற்க,
  மவுன தவம் ஒருமாதம் காலம் ஏற்று ஆற்ற,
இனம்பலவாம் எண்ண அலை ஒடுங்கி. ஓய்ந்த போது,
  எத்தனையோ தத்துவங்கள் இறைவிளக்கம் பெற்றேன்.
வனம்போக வேண்டாம் நாம். இல்லறத்திலிருந்து
  வாழ்ந்து கொண்டே, தவத்தை ஆற்றி வெற்றி பெறலாம்.”
(ஞாக.பா.1562)

"தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொள்ளும் சினம்" – (திருக்குறள்.)

வாழ்க வையகம் ! வாழ்க வளமுடன் !!

## 6.துன்பங்களையும் இகழ்ந்து நோக்குங்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருக்கும், சுவாமி விவேகானந்தருக்கும் நடைபெற்ற உரையாடல்...

சுவாமி விவேகானந்தர்: நாம் ஏன் எப்போதும் மகிழ்ச்சியில்லாமல் இருக்கிறோம்?

இராமகிருஷ்ண பரமஹம்சர்: துன்பத்தையே நினைத்து கற்பனை செய்துகொண்டிருப்பது உன் வழக்கமாகிவிட்டது. அதனால் உன்னால் மகிழ்ச்சியுடன் இருக்க முடியவில்லை.

சுவாமி விவேகானந்தர்: நல்லவர்களுக்கு மட்டும் எப்போதும் துன்பம் ஏன்?

இராமகிருஷ்ண பரமஹம்சர்: உரசாமல் வைரத்தை பட்டை தீட்டமுடியாது. நெருப்பிலிடாமல் தங்கத்தை தூய்மைப்படுத்த முடியாது. நல்லவர்கள் சோதனைக்குள்ளாவார்கள். ஆனால் அவர்கள் பாதிப்புக்கு உள்ளாக மாட்டார்கள். அந்த சோதனையின் மூலம் அவர்கள் மேன்மையடைவார்களே தவிர கீழே செல்ல மாட்டார்கள்.

சுவாமி விவேகானந்தர்: அப்போது, சோதனைகள் நன்மைக்கு என்று சொல்கிறீர்களா?

இராமகிருஷ்ண பரமஹம்சர்: ஆம். அனுபவத்தை விட பெரிய ஆசிரியர் வேறு யாருமில்லை. அது முதலில் சோதனையை கொடுத்துவிட்டு பிறகு தான் பாடத்தை போதிக்கும்.

சுவாமி விவேகானந்தர்: கணக்கற்ற பிரச்னைகளில் மூழ்கி தவிப்பதால் நாங்கள் எங்கே போகிறோம் தெரியவில்லை....

இராமகிருஷ்ண பரமஹம்சர்: வெளியே பார்த்தால் எங்கே போகிறோம் என்று உனக்கு புரியாது. உனக்குள்ளே பார். புரியும். கண்களால் பார்க்கத் தான் முடியும். ஆனால் உள்ளத்தால் தான் வழியை காட்ட முடியும்.

சுவாமி விவேகானந்தர்: சரியான பாதையில் போகும் போதும் தோல்வி அடிக்கடி ஏற்படுகிறதே?

இராமகிருஷ்ண பரமஹம்சர்: செல்லும் பாதையில் வெற்றி என்பது பிறரால் அளக்கப்படுவது. ஆனால் அதில் கிடைக்கும் திருப்தி என்பது உன்னால் உன்னால் மட்டுமே உணரப்படுவது.

சுவாமி விவேகானந்தர்: கடினமான சூழ்நிலைகளில் எப்படி நீங்கள் உற்சாகம் குறையாமல் உத்வேகத்துடன் இருக்கிறீர்கள்?

இராமகிருஷ்ண பரமஹம்சர்: எப்பொழுதும், இனி எப்படி போகப் போகிறோம் என்று அச்சப்படுவதைவிட இதுவரை நீ எப்படி வந்திருக்கிறாய், எதையெல்லாம் கடந்து வந்திருக்கிறாய் என்று பார். உனக்கு கிடைத்த வரங்களை எண்ணிக்கொள். இழந்தவைகளை அல்ல.

சுவாமி விவேகானந்தர்: இந்த மக்களை நினைத்து நீங்கள் வியக்கும் விஷயம் எது?

இராமகிருஷ்ண பரமஹம்சர்: துன்பப்படும்போது "எனக்கு ஏன்? என்னை மட்டும் ஏன்??" என்று கேட்பவர்கள் இன்பத்தின் போது அந்த கேள்வியை கேட்பதில்லை. அதை நினைத்து தான் வியக்கிறேன்.

சுவாமி விவேகானந்தர்: வாழ்க்கையில் மிகச் சிறந்தவைகளை நான் அடைவது எப்படி?

இராமகிருஷ்ண பரமஹம்சர்: உன் கடந்த காலத்தை வருத்தமின்றி ஏற்றுக்கொள். நிகழ்காலத்தை நம்பிக்கையோடு கைக்கொள். எதிர்காலத்தை அச்சமின்றி எதிர்நோக்கு. இதுவே வாழ்க்கையில் சிறந்தவைகளை பெற கடைபிடிக்கவேண்டிய நியதி
.
சுவாமி விவேகானந்தர்: கடைசியாக ஒரே ஒரு கேள்வி. சில நேரங்களில் என்னுடைய பிரார்த்தனைகளை இறைவன் கேட்கவில்லையோ என்று தோன்றுகிறது.

இராமகிருஷ்ண பரமஹம்சர்: கேட்கப்படாத பிரார்த்தனைகள் என்று எதுவுமே இல்லை. அச்சத்தை விடு. நம்பிக்கை கொள். வாழ்க்கை என்பது தீர்வு காணப்படவேண்டிய ஒரு புதிர் தானே தவிர பிரச்னை அல்ல. எப்படி வாழவேண்டும் என்று மட்டும் நாம் அறிந்து கொண்டால் வாழ்க்கை மிக மிக இனிமையாக மாறிவிடும். என்னை நம்பு.

"அறிவுள்ளவர்கள், செய்யும் செயல்களின் பலனை துறந்து, துன்பங்களில் இருந்து விடுபட்டு, பிறவி தளைகளில் இருந்தும் விடு படுகிறார்கள்" என்பது பகவத்கீதை.

துன்பங்களை இகழ்ந்து நோக்குங்கள் என்கிறது இப்பாடலில் திருவாசகம்.

**"புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்**
**புயங்கன் தாளே புந்திவைத்திட்டு**
**இகழ்மின் எல்லா அல்லலையும்**
**இனியோர் இடையூறு அடையாமே**
**திகழும் சீரார் சிவபுரத்துச்**
**சென்று சிவன்தாள் வணங்கிநாம்**

**நிகழும் அடியார் முன்சென்று**
**நெஞ்சம் உருகி நிற்போமே.”** (திருவாசக.பா.610)

- புகழுங்கள்.
- வணங்குங்கள்.
- பூவினை மாலையாக் கட்டுங்கள்.
- பாம்பு அணிந்த பெருமானின் திருவடிகளை புத்தியில் நிறுத்துங்கள்.
- எல்லாத துன்பங்களையும் இகழ்ந்து நோக்குங்கள்.
- இனியும் ஒரு துன்பம் வராமல் சிவபுரம் சென்று, சிவபெருமானது திருவடிகளை வணங்கி, அங்குள்ள அடியார்களின் முன் சென்று மனம் உருகி நிற்போமாக!

எந்தத் துன்பம் வரினும் எதிர்நோக்கி நிற்பாயேல்
இன்பமே மிகுதிபடும் துன்பங்கள் தோல்வியுறும்”
என்பது வேதாத்திரியம்.

துன்பங்களை குறைக்க வழியும் சொல்கிறது வேதாத்திரியம்.

”வாழ்வினிலே அனுபோகப் பொருள் எண்ணிக்கை
வளரவிடக் கூடாது இன்பம் வேண்டின்!
வாழ்வினிலே பசிவெப்ப தட்ப ஏற்றம்
வளர்க்காமல், இவற்றை ஓர் அளவில் தாங்கி,
வாழ்வினிலே துன்பத்தைச் சகித்துக் கொள்ளும்
வழக்க த தைப் பழக்கத்தால் அடைய வேண்டும்
வாழ்வினிலே துன்பங்கள் இனிதாய் மாற,
வழியிதுவே! அனுபவத்தில் உணர்ந்த உண்மை!”
(ஞாக.பா.1557)

மனித வாழ்க்கை இனிமையாக இருக்க விரும்பினால், பயன்படுத்துகின்ற வாழ்வியல் துய்ப்புப் பொருட்களின் எண்ணிக்கையை அதிகமாக்கக் கூடாது.

இயற்கைத் துன்பங்களான பசி, வெப்ப தட்ப ஏற்றத்தாழ்வு ஆகியவற்றை வளரவிடக் கூடாது.

இயற்கைத் துன்பங்களை சகித்துக் கொண்டும், ஏற்றுக் கொண்டும் வாழ்கின்ற வழக்கத்தைப் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

பிறந்தது முதல் இறக்கும் வரை இயற்கையில் ஏற்படும் இந்த வகையான துன்பங்களை மனிதன் அனுபவிக்கப் பழகிவிட்டால், துன்பங்கள் எல்லாம் இனிமையாக மாறுவதற்கு சரியான வழி இதுதான் என்பதை அனுபவத்தின் மூலம் உணர்ந்து கொண்ட

உண்மை இதுவே ஆகும்.துன்பங்களை நீக்கி ஆனந்தமாக வாழ்வோமாக1

## 7. முயற்சி பயிற்சி தேர்ச்சி

**அ**ந்த ஜென் துறவி மிகவும் ஜாலியானவர். ஒரு மடாலயம் அமைத்து, அதில் இருந்த சீடர்களுக்கு நற்பண்புகளை கற்றுக் கொடுத்து வந்தார். அவர் எதற்காகவும் சீடர்களிடம் கோபம் கொண்டது இல்லை.

ஒரு நாள் அந்தத் துறவி, தனது சீடர்களுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது சீடர்கள் சிலர், ‘குருவே! உங்களுக்கு கதை என்றால் பிடிக்குமா? உங்களுக்குப் பிடித்த கதை எதுவும் இருக்கிறதா?’ என்று கேட்டனர்.

துறவியோ, ‘எனக்கு ‘குதிரையும் ஆடும்’ என்ற கதை பிடிக்கும்’ என்று சீடர்களிடம் சொன்னார்.

‘குருவே! உங்களுக்கு பிடித்த அந்தக் கதையை எங்களுக்கும் சொல்லுங்கள்’ என்று சீடர்கள் கேட்கவே, அவர்களுக்கு அந்தக் கதையைச் சொல்லத் தொடங்கினார் குரு.

அந்த ஊரில் இருந்த சிறிய விவசாயி ஒருவர், ஒரு குதிரையையும், ஆட்டையும் வளர்த்து வந்தான்.

குதிரையும் ஆடும் சிறந்த நண்பர்களாக இருந்து வந்தன. ஒரு நாள் அந்த குதிரை நோயால் பாதிக்கப்பட்டது.

அதனால் குதிரைக்கு சிகிச்சை அளிக்க மருத்துவர் ஒருவரை அழைத்து வந்தான் விவசாயி.

மருத்துவர் அந்த குதிரையின் நிலையை பார்த்து, ‘நான் மூன்று நாட்கள் வந்து மருந்து தருகிறேன். அந்த மருந்தை சாப்பிட்டு குதிரை எழுந்து நடந்தால் சரி.. இல்லையெனில் அதனைக் கொன்று விட வேண்டியது தான். வேறு வழியில்லை’ என்று சொல்லி, அன்றைய மருந்தை கொடுத்துச் சென்றார்.

இவர்களது உரையாடலை கேட்ட ஆடு பயந்து போனது. மறுநாள், அந்த மருத்துவர் வந்து அன்றைய மருந்தைக் கொடுத்துச் சென்றார்.

அதன் பிறகு ஆடு, தன் நண்பனான குதிரையிடம் வந்தது. 'எழுந்து நட நண்பா! இல்லாவிட்டால் அவர்கள் உன்னைக் கொன்று விடுவார்கள்' என்று அந்த குதிரையை ஊக்குவித்தது.

மூன்றாம் நாளும் மருத்துவர் வந்து குதிரைக்கு மருந்து கொடுத்தார். பின்னர் அந்த விவசாயிடம் 'நாளை குதிரை நடக்கவில்லை என்றால், அதனைக் கொன்று விட வேண்டும்.

இல்லாவிட்டால், குதிரைக்கு வந்திருக்கும் நோய் மற்றவர்களுக்கும் பரவி விடும்' என்று சொல்லிச் சென்றார்.

அந்த மருத்துவர் போனதும், ஆடு குதிரையிடம் வந்து, 'நண்பா! எப்படியாவது எழுந்து நடக்க முயற்சி செய். உன்னால் முடியும். எழுந்திரு! எழுந்திரு!' என்று சொல்லியது. அந்த குதிரையும் முயற்சி செய்து எழுந்து நடந்து விட்டது.

எதிர்பாராத விதமாக அந்த குதிரையை விவசாயி பார்க்க வரும் போது, குதிரை ஓடி ஆடி விளையாடியதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தார்.

"இறையுணர்வு பெற்று இறைவனின் திருவடிகளை அடைய - முயற்சியைக் கைவிடாது இருங்கள்" என்கிறது திருவாசகம்.

"நிற்பார் நிற்கநில்லா உலகில்
  நில்லோம் இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாம் திருமேனிப்
  புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாம் தாழாதே
  நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிறப்பால் நின்று பேழ்கணித்தாற்
  பெறுதற்கு அரியன் பெருமானே" (திருவாசக.பா.611)

- நிலையற்ற இந்த உலகில் இருப்பவர் இருங்கள். நாம் இனி இருக்க மாட்டோம்.
- அழகால் தனக்குத் தானே ஒப்புமை உடைய திருமேனி கொண்ட, பாம்பு, அணிந்த பெருமானின் திருவடிகளைச் சென்று சேர்வோம்.
- அவனது பொன்னடியை அடைவதற்கு முயலுபவர் அனைவரும் அம்முயற்சியைக் கைவிடாது இருங்கள்.
- பிறகு பெருமை பேசி நிற்பதால் பயன் விளையாது.
- ஏனெனில் பெருமான் பெறுவதற்கு அருமை உடையவன்.

இறைநிலையை அடைவதற்கு அனைவரும் முயற்சியை கைவிடாது இருங்கள்" என்கிறது திருவாசகம்.

இறைநிலையை முயற்சியாலும் பயிற்சியாலும் சாதனையாலும் அடையலாம் என்கிறது வேதாத்திரியம்.

"இறையுணர்வார் சிலமுயன்று வேதநூல்கள் மூலம்
இவ்விறையே அறிவுஎன உணர முடியாமல்,
இறைவேறாய் அறிவுவேறாக எண்ணி எண்ணி,
எழும்பிணக்கில் புரட்டுபுரண்டே மயக்கில் மாள்வார்.
இறைநிலையே அறிவாக இயங்கும் உண்மைகாண,
ஏற்றதொரு சாதனைதான் அகநோக்குப் பயிற்சி.
இறையறிவாய் உலகாக உயிர்களாகத் திகழும்
இந்தஉண்மை உயிர்மீது மனம் ஒடுங்க ஒளிரும்." (ஞாக.பா.1407)

இறைநிலையை அறிய வேண்டும் என்ற எண்ண எழுச்சி மனிதராகப் பிறந்தவர்க்கு ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்படுவது இயல்பு.

அவ்வாறு சிலர் தன்னை அறிய வேண்டும், கடவுள் தத்துவத்தை அறிய வேண்டும் என்று முயற்சிப்பார்கள்.

வேத நூல்களைப் படித்தும், இறைநிலையே, அறிவாகவும், தானாகவும் இருக்கிறது என்பதை உணர முடியாமல்,

இறை நிலையையும் அறிவையும் வேறு வேறா எண்ணி, அறிவிற்குப் பொருந்தா வகையில், மனம் பிணக்கமடைந்து. மயக்குற்று அலைந்து திரிந்து மடிந்தும் போவார்கள்.

இறைநிலையானது அறிவாகவும் உள்ளது என்ற உண்மையை உணர்வதற்கு உகந்த சாதனை மார்க்கம் தான் அகநோக்குப் பயிற்சியாகிய குண்டலினி யோகம் ஆகும்.

மனதின் அலைச்சுழல் வேகத்தைக் குறைப்பதற்கு உயிரில் மனதை ஒடுக்க வேண்டும்.

அந்நிலையில் இறை நிலையே அறிவாகவும், உலகங்களாகவும், உயிர்களாகவும் திகழ்கின்றது என்னும் உண்மையை உணர்வதால், அறிவில் தெளிவு ஏற்படும்.

அறிவில் தெளிவு கிடைத்தின் பின் இயற்கையாகவே இறைநிலை உணர்வு பெற்று ஆனந்தமாக வாழலாம். வாழ்க வளமுடன்.

## 8. அனைத்துமாகி நானே நின்றேன்

சுவாமி விவேகானந்தர் சொல்லுகிறார்…..

“போர்க்களத்திலும் நாம் ஞானப் பயிற்சி புரியலாம்.” கீதை அவ்வாறே போதிக்கப் பட்டது.

மனத்திறகு மூன்று நிலைகள் உண்டு. சுறுசுறுப்பு நிலை விரைவு அதிர்வுகளாலும், மந்த நிலை மந்தமான அதிர்வுகளாலும், அமைதி நிலை அனைத்திலும் மிக மிக விரைவு படைத்த அதிர்வுகளாலும் குறிக்கப்படுகிறது.

- தேரில் அமர்ந்திருப்பது ஆன்மா.
- உடலே தேர்.
- பொறி புலன்களே குதிரைகள்.
- மனமே கடிவாளம்.
- அறிவே தேர்ப்பாகன்.
- இத்தகையத் தேரில் ஏறிச் சென்றே மனிதன் மாயை என்ற கடலைக் கடக்க வேண்டும்.
- அதற்கு அப்பாலும் அவன் செல்கிறான்.
- அவன் கடவுளை அடைகிறான்.

ஒருவன் தன் புலன்களுக்கு அடிமையாக இருக்கும்போது, அவன் இந்த உலகத்தைச் சார்ந்தவனாக இருக்கிறான்.

அவன் தன் புலன்களை அடக்கிய பின் இவ்வுலகப் பற்றைத் துறந்தவன் ஆகிறான். **(சுவாமி விவேகானந்தரின் ஞான தீபம், சுடர் 6, பக்.310)**

**”பெருமான் பேரா னந்தத்துப்**
**பிரியா திருக்கப் பெற்றீர்காள்**
**அருமால் உற்றுப் பின்னைநீர்**
**அம்மா அழுங்கி அரற்றாதே**
**திருமா மணிசேர் திருக்கத வவும்**
**திறந்த போதே சிவபுரத்துத்**
**திருமால் அறியாத் திருப்புயங்கன்**
**திருத்தாள் சென்று சேர்வோமே.”** (திருவாசக.பா.612)

- பெருமானது பேரின்பத்தில் பிரிவுஅற இருக்கும் பேறு பெற்றவர்களே!
- விட்டு நீங்குவதற்கு அருமை உடைய உலகப்பற்று என்னும் மயக்கம் கொண்டு. பின்பு ”அம்மா!” என்று கதறி அழுவதைத் தவிர்த்து, அழகிய மணிகள் பதிக்கப்பட்ட கதவு

திறந்திருக்கும்போதே, திருமாலும் அறியாது. பாம்பு அணிந்த பெருமானின் திருவடிகளைச் சென்று சேர்வோமாக

உலகப்பற்று என்னும் மயக்கம் கொண்டு. கதறி அழுவதைத் தவிர்த்து இறைவனிடம் சரண் புக வேண்டும் என்கிறார் மாணிக்கவசாகர்.

மயக்கம் அல்லது மாயை என்றால் என்ன? வேதாத்திரியம் சொல்கிறது.

கற்பனை வேகத்தால் இயற்கையை மறந்து, சமூகத்தின் அமைப்பையும், மக்களின் எண்ணம் செயல்களால் விளைந்து வரும் விளையப் போகும் நிகழ்ச்சிகளையும் மறந்து,

உடலளவின் தேவைகளையும் அறிவுக்கு அந்தச் சமயப் பொருத்தத்தையும் ஞாபகத்தில் கொண்டு, புலனறிவின் எல்லையிலேயே மட்டும் விரிந்து, மயக்க நிலையில் எண்ணிச் செயலாற்றுவது மாயை எனப்படுகிறது.

இந்த மயக்கத்தை தெளிவு படுத்துவது பற்றி சொல்கிறது வேதாத்திரியம்.

"விதிகுத்த வழியே என் வாழ்க்கை என்று
  வெகு நாட்களைக் கழித்தேன். அனுபோகத்தில்
எதிலுமே திருப்தியின்றி, இன்பம் துன்பம்
  எனும் சுழலால் எண்ணத்தின் வேகம் மீறி,
மதிஉயர்ந்து மதியறிந்த போது அங்கே
  மதியாயும் விதியாயும் மாய்கை, ஞானம்,
பதி,பாசம்,பசு என்பது அனைத்து மாகிப்
  பலதாயும் ஒன்றாயும் நானே நின்றேன்." (ஞாக.பா.1276)

மதி = மனித அறிவு
விதி = இயற்கை அறிவு
மாயை = உண்மைக்கு மாறான மயக்கநிலை
ஞானம் = அறிவை அறிவால் அறிந்த தெளிவு
பதி = இறைநிலை
பாசம் = பற்றுதல், மும்மலக்கட்டு
பசு = சீவன்கள்.

இயற்கை நியதியாகிய விதி வகுத்த வழியில் வாழ்வோம் என்று கருதி நீண்ட காலம் வாழ்ந்து நாட்களைக் கழித்தேன்.

அனுபோக அனுபவங்களில் எதுவாக யிருந்தாலும் எதிலும் திருப்தி இல்லாமல் இருந்தேன்.

இன்பம், துன்பம் என்ற சுழற்சியை மாறி மாறி அனுபவித்து, எண்ணத்தின் வேகம் அதிகமாகி அறிவு உயர்ந்தது.

அறிவை அறிந்தபோது. மதி, விதி, மாயை, ஞானம், பதி, பாசம், பசு என்ற அனைத்துமாக ஆகி, பலவாகவும், ஒன்றாகவும் நானே ஆகிவிட்டேன்.

இந்த நிலையை நாமும் அடைந்து ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.”

## 9. ஆராத ஆர்வங் கூர அழுந்துவீர்

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்கிறார்…..

”ஞானம் அடைந்தவனின் நிலைமை எப்படி இருக்கும்?

இறைவனுடைய பெயரைக் கூறும் பொழுது, கண்ணீரும், மயிர்க் கூச்றெிதலும் அவனுக்கு உண்டாகும். கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழியும்.

”பொருளாசை இருக்கும் வரை. காமினி காஞ்சனப் பற்று இருக்கும் வரை, உடற்பற்று அழிவதில்லை.

பொருளாசை எவ்வளவுக்கு குறைகிறதோ அந்த அளவுக்கு ஆத்ம ஞானத்தை நோக்கி முன்னேற முடிகிறது. உடல் பற்றும் அந்த அளவுக்குக் குறைகிறது.

பொருளாசை அடியோடு அழிந்தால்தான் ஆத்ம ஞானம் ஏற்படுகிறது.

ஆத்மா தனி, உடல் தனி என்ற உணர்வு அப்போதுதான் உண்டாகிறது.

இளந் தேங்காயில் நீர் வற்றாத வரை அதனுடைய பருப்பையும் ஓட்டையும் அரிவாளால் கூடத் தனியே பிரிப்பது கடினம்.

நீர் வற்றி விட்டால் உள்ளே பருப்பு ”குடு, குடு” என்ற ஆடுகிறது. ஓட்டிலிருந்து பருப்பைத் தனியாகி விடுகிறது. இதைத்தான் கொப்பரைத தேங்காய் என்கிறோம்.

”இறைவனை அடைந்து விட்டதன் அறிகுறி, பக்தன் கொப்பரைத் தேங்காயைப் போல் ஆகிவிடுவதுதான்.

உடலே ஆத்மா என்ற அறிவு போய் விடுகிறது. உடலைப் பற்றிய இன்ப துன்பங்களை அவன் தன்னுடைய இன்ப துன்பங்களாக நினைக்க மாட்டான்.

உடல் இன்பததைச் சிறிதும் விரும்ப மாட்டான். ஜீவன் முக்தனாகத் திரிந்து கொண்டிருப்பான்.

”இறைவனுடைய பெயரை நவிலும் போதே அவனிடம் கண்ணீர் அரும்புதலும், மயிர்ச் கூச்செறிதலும் ஏற்படுமானால் காமினி காஞ்சனப் பற்று அற்றுவிட்டது. அவன் இறைவனை அடைந்தாகி விட்டது என்று அறிந்து கொள்.

நெருப்புக்குச்சி நன்றாக உலர்ந்து இருந்தால் ஒரு முறை கிழித்த உடனேயே குப்பென்று பற்றிக் கொள்கிறது.

ஆனால் ஈரமான குச்சியை ஐம்பது முறை கிழித்தாலும் அதில் தீப்பற்றுவதில்லை.  குச்சிகள் தாம் வீணாகின்றன.

பொருளாசையில் ஊறிக் கிடக்கும் மனத்தில், காமினி காஞ்சனத் தினா ல் நனைந்திருக்கும் மனத்தில், இறைவனைப் பற்றிய விழிப்பு ஏற்படுவதில்லை.

ஆயிரம் தடவை முயற்சி செய்தாலும் அது வீணான முயற்சிதான். பொருளாசை வற்றிய அக்கணமே ஆன்மிக விழிப்பு ஏற்படுகிறது. (ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் பாகம்.3, பக்.608-609)

**"சேரக் கருதிச் சிந்தனையைத்**
**திருந்த வைத்துச் சிந்திமின்**
**போரில் பொலியும் வேல்கண்ணாள்**
**பங்கன் புயங்கன் அருள் அமுதம்**
**ஆரப் பருகி ஆராத**
**ஆர்வங் கூர அழுந்துவீர்**
**போரப் புரிமின் சிவன்கழற்கே**
**பொய்யிற் கிடந்து புரளாதே."** (திருவாசக.பா.613)

- சிவனது திருவடியைச் சேர வேண்டும் என்று நினைந்து, உள் த்தை த் திருத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.
- போர் செய்யப் பயன்படும் வேல் போன்ற கண்ணை உடைய உமையின் பாகனும், பாம்பு அணிந்திருப்பவனும், ஆகிய பெருமானது அருள் அமுதத்தை நிரம்பப் பருகி, முடிவில்லாத அன்பு மிகுமாறு. அந்த இன்பத்தில் முழ்குங்கள்.
- இந்தப் பொய்யான உலக வாழ்வில் கிடந்து உழலாது, சிவனது திருவடியைச் சென்று சேருங்கள்.

"சிவனது திருவடியைச் சேர வேண்டும் என்று நினைந்து, உள்ளத் தை திருத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்கிறது திருவாசகம்.

மனதை தூய்மையாக வைத்துக் கொள்ள மனிதமனம் நிறைவு பெற வேண்டும்.  மனித மனம் நிறைவு பெற்றால் இறையுணர்வு பெற்று இனிய வாழ்வு பெறலாம் என்கிறது வேதாத்திரியம்.

"உடல்துன்பம், மனக்குழப்பம், அறிவு உயராமை
உலகத்தில் மக்கள்தமை விலங்கனத்தே வைக்கும்.
உடல்வளத்தை, நிலவளத்தை, அறிவு உடல் திறனால்
கருத்துடனே வாழ்வின்வளப் பொருட்களாக மாற்றிக்
குடல்பசிக்கும், மற்றும்உடல் தேவைக்கும் ஏற்பக்
குறைவின்றிப் பொருள்பெறவும், காப்புகல்வி பெறவும்,
இடல்மிகுந்து, ஏற்றல்குறைந் துலக வாழ்வு அமைந்தால்

எல்லாரும் அறிவறிந்து இனியவாழ்வு பெறலாம்." (ஞாக.பா.306)

விலங்கினங்களுக்கு சிந்தனையாற்றல் இல்லாததால் உணவு செய்யத் தெரியாது.

பிற உயிரை வருத்தியும், கொலை செய்தும், பிற உயிரின் வாழும் சுதந்திரத்தைப் பறித்தும், தனக்கு சொந்தமில்லாத அந்த உடலைக் உண்டு வாழுகின்றன.

தானும் இனிமையாக வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்குக்கூடிய சிந்தனை ஆற்றல் பெற்றவன் மனிதன்.

ஆனால் உடலில் துன்பம் ஏற்படும்போதும், மனக்குழப்பத்தால் அமைதியில்லாத போதும், அறிவு உயர்வடையாத போதும், மனிதன் தனது சிறப்பை மறந்து விலங்கு நிலையில் செயல்படுகிறான்.

பூ உலகில் பெரும் பகுதியான கடலின் வளங்களையும், நிலத்தின் வளங்களையும், மனிதன் தனது அறிவின் ஆற்றலாலும் உடல் உழைப்பாலும், தேவைக்கேற்ப வாழ்வின் வளங்களாக மாற்றிக் கொள்ள முடியும்.

தனது குடல் பசியைப் போக்கிக் கொள்ளவும், வாழ்வியல் தேவைகளுக்கான பொருட்களை நிறைவாகப் பெற்று பயன்படுத்த வேண்டியது அவசியமாகும்.

வாழ்வியல் தேவைப் பொருட்களைப் பெற அறிவை உயர்த்திக் கொள்ளும் சாதனமான கல்வி அவசியம்.

ஈதல் செயல் மிகுதியாகவும், பெறும் செயல் குறைவாகவும் அமைய வேண்டும்.

விலங்கினத்தின் வித்தின் மூலம், மனிதனாகி உயர்ந்த நிலையில் வாழும் மனிதன், வாழ்வியல் துன்பங்களால் மீண்டும் விலங்கு நிலைக்கு இறங்கி விடாமலும்,

உலக வளங்களை வாழ்வின் வளங்களாக மாற்றி, இட்டுண்டு வாழ கல்வி அறிவும், ஈதல் மிகுந்து ஏற்றல் குறைந்தும் உலக வாழ்வு அமையுமேயானல் உலக மக்கள் மனநிறைவுடன் இனிது வாழலாம். வாழ்க வளமுடன்.

## 10. தெருள்வீர் ஆகில் இதுசெய்மின்

தமிழ் மறையாகிய திருவாசகத்தையும் வேதாத்திரியத்தையும் ஒருமுறை ஓதினாலும் கருங்கல் மனமும் கரையும்.

கண்களில் மணற் கேணியின் ஊற்றுப் போல கண்ணீர் பெருகும். உடம்பெல்லாம் சிலிர்க்கும்.

பக்தியும் ஞானமும் தரும் மேலிட்டால் இறைவனை இன்னும் காணவில்லையே என்ற பரபரப்பு ஏற்படும்.

உடனே அவர்கள் இறையடியார் ஆவரேயன்றி மற்றையோர் ஆகார்.

**"புரள்வார் தொழுவார் புகழ்வாராய்**
  **இன்றே வந்தாள் ஆளாகாதீர்**
**மருள்வீர் பின்னை மதிப்பாரார்**
  **மதியுள் கலங்கி மயங்குவீர்**
**தெருள்வீர் ஆகில் இதுசெய்மின்**
  **சிவலோ கக்கோன் திருப்புயங்கன்**
**அருள்ஆர் பெறுவார் அகலிடத்தே**
  **அந்தோ அந்தோ அந்தோவே. "** (திருவாசக.பா.614)

- புரண்டு வணங்கி வந்து புகழ்ந்து இன்றே வந்து அடிமை ஆகி விடுங்கள்.
- இல்லையேல், பின்னர் மிகவும் மயங்க வேண்டிவரும்.
- அதன்பின் உலகில் உங்களை யார் மதிப்பார்?
- தெளிவடைய விரும்பினால் பெருமானுக்கு ஆட்படுதலாகிய இதனைச் செய்யுங்கள்.
- சிவலோக நாதனாகிய பாம்பு அணிந்த பெருமானின் திருவடிகளை, இந்நிலவுலகில் யாரால் பெற முடியும்,
- ஐயோ, ஐயோ, ஐயகோ!  (பெற முடியாது என்பது கருத்து)

அறிவின் அக நோக்குப் பயணம் மேற்கொண்டால் இறையுணர்வு பெற்று இறைவனது திருவடிகளை நாமும் பெற முடியும் என்கிறது வேதாத்திரியம்.

அறிவின் அக நோக்குப் பயணம்

"ஆன்மீகத் துறையென்ற அகலவழிப் பாதையிலே
  அடிவைத்து மென்மேலும் முன்னேறிப் போகுங்கால்
அறிவுபெறும் அனுபவங்கள் வியப்பாகும். இனிமையாம்.
  ஆன்மஒளி சுடர்விட்டு உள்ளுணர்வுப் பேறாகும்.
ஊன்உருவமான உடல் ஊர்தியென்னும் ஊடே,
  உயிர் என்ற சூக்குமமே "நான்" என்ற உணர்வு வரும்.

ஒடுங்க ஒடுங்கக் காணும் உண்மையோ அறிவதுவே
  உயிரிலிருந்து ஓங்கி எழுந்து உடல் உலகம் வெளி விரியும்."
(ஞாக.பா.1434 (1)

அன்பு வழியும், அருள் வழியும், தெய்வீக வழியுமாகிய ஆன்மீகத் துறை என்ற அகன்ற பாதையில் பயணித்து அடிமேல் அடிவைத்து முன்னேறிப் போகின்றபோது, வியப்பான அனுபவங்களை அறிவு அனுபவமாகப் பெறும்.

அந்த அனுபவங்கள் இனிமையாக இருக்கும். உடலிலிருந்தும் மனதிலிருந்தும் முற்றிலும் வேறதாகக் கருதப்படுகின்ற ஆன்ம ஒளியானது பிரகாசமாகி உள்ளுணர்வு கிட்டும் பேறு அமையப்பெறும்.

தசையால் உருவாக்கபட்டுள்ள உடல் என்னும் வாகனத்திற்குள்ளே, அந்த உடலை சூக்குமமாக இயக்குகின்ற உயிர்தான் "நான்" என்ற உணர்வு உண்டாகும்.

அந்த நான் என்ற உணர்வு குறையக் குறைய அறிவு என்ற இருப்பு நிலையை உணரலாம் அந்த அறிவானது இயக்கத்தில் உயிராகவும் எழுச்சி பெற்று உடலாகவும் உலகமாகவும், வெளியாகவும் விரிவடையும்.

மனித அறிவின் அகநோக்குப் பயணத்தில் உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே தெய்வமாகவும் உள்ளது என்ற உணர்வு கிட்டும்.

"நான்" அதுவே இருப்புநிலை மெய்ப்பொருள் தெய்வமெனும்,
  நன்முடிவு விளக்கமாம். அந்தமுழு முதற்பொருளே
நல்ல ஒழுங்காற்றலாய், நல்லுணர்வாய், அறிவறியும்
  நல் ஊற்றாய்த் திருவருளாய், நல்லின்ப வெள்ளமாய்,
தேன்பொழியும் பேரின்பம் திகட்டாது! சலிக்காது!
  திருத்தங்கள் எண்ணம்போல் செயல்களிலே மலர்ந்துவரும்
செருக்கொழித்து தான்அடங்கித் தெய்வநிலை எங்கெதிலும்
  திருவருளின் காட்சியாம், திரும்புங்கள் உட்புறமாய்." (ஞாக.பா.1434
(2)

அறிவின் அகநோக்குப் பயணத்தில், உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே ”நான்” ஆகவும் உள்ளது.

அதுவே இருப்பு நிலையாகிய மெய்ப்பொருள் என்றும், தெய்வம் என்று சொல்லப்படுகிறது என்பது முடிவில் விளக்கமாகும்.

அந்த மெய்பொருளாகிய முழுமுதற்பொருளே இயல்பூக்கத்தினால் ஒழுங்காற்றலாகவும், தெய்வீகமாகிய நல்லுணர்வாகவும், அறிவை அறிவதற்கான நல்ல ஊற்றாகவும், தெய்வீக அருளாகவும், நல்ல இன்ப வெள்ளமாகவும் உணரப்படும்.

அந்த உணர்வானது தேன் பொழியும்போது ஏற்படுகின்ற இன்பம் போலிருக்கும். ஆனால் திகட்டாது. சலிக்காது.  நீடித்த, நிலைத்த, சலிப்பில்லாத பேரின்ப நிலையாக இருக்கும்.

அந்நிலையானது அனுபவமாகி விடுவதால், எண்ணம், சொல், செயல்களில் திருத்தங்கள் ஏற்படும்.

அந்தத் திருத்தங்களால் தன்முனைப்பு என்னும் செருக்கானது ஒழிந்துவிடும்.  எங்கும் எதிலும் தெய்வீக காட்சியாகவே உணரப்படும்.

ஆகவே மனதை உட்புறமாகத் திருப்பி,அறிவின் அகநோக்குப் பயணத்தில் பேரின்ப நிலையை அகத்துணர்வாக அனுபவித்து ஆனந்தமாக வாழ்வீர்களாக!

## துணைநின்ற நூல்கள்


1. திருவாசகம், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
2. திருவாசகப் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
3. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம்,ஈரோடு
4. இணையதள தகவல்கள்.
5. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ், வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி
6. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.
7. வேதாத்திரி மகரிஷி பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
8. ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேச மஞ்சரீ, ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை.
9. ஜென் கதைகள், இணையதளம்.